**வறட்சியிலும் வளமான மகசூல் நம்பிக்கை கொடுத்த நடவு துவரை….!**

**25.02.2013**






துவரை… குறிப்பிட்ட இடைவெளியில், தூவி விதைக்கப்படுவதுதான் கடந்த ஆண்டிற்கு முன்பு வரை நடைமுறை! ஆனால், துவரையை நாற்று மூலம் நடவு செய்யும் திட்டத்தை கடந்த ஆண்டு தமிழக வேளாண்மைத் துறை அறிமுகப்படுத்தியது.. ஓர்ஆச்சரிய மாற்றமே! நாற்று உற்பத்தி செய்து, நிலத்தில் குறிப்பிட்ட இடைவெளியில் நடவு செய்ய வேண்டும் என்கிற இந்தப் புதிய முறை பற்றி, 10.8.12 தேதியிட்ட பசுமை விகடன் இதழில், மானாவாரியில் ஒரு டன், இறவையில் ஒன்றரை டன்… நடவு முறையில் துவரை சாகுபடி என்ற தலைப்பில் கட்டுரை வெளியாகியிருந்தது. நடவு முறையைப் பற்றியும், அதிலுள்ள நன்மைகள் பற்றியும் அதில் பதிவு செய்திருந்தார், திண்டுக்கல் மாவட்டம், குஜிலயம்பாறை வேளாண் உதவி இயக்குநர், ரவிபாரதி. அதாவது… மானாவாரியில் ஏக்கருக்கு 400 கிலோ, இறவையில் 600 கிலோ… வீதம் மகசூல் கிடைக்கும் என்பதுதான் வேளாண் துறையின் கணிப்பு. கிட்டத்தட்ட நான்கு மாதங்கள் முடிந்த நிலையில், 'நடைமுறையில், நடவு துவரை சாகுபடி எந்தளவிற்குப் பலன் கொடுத்திருக்கும் என்கிற கேள்வி நமக்கு எழுந்தது! இறவை பாசனத்தில் நடவு முறையில் துவரை சாகுபடி செய்திருக்கும் குஜிலயம்பாறை அருகிலுள்ள வடுகம்பாடி கிராமத்தைச் சோந்த ராமன் – சாவித்திரி தம்பதியைச் சந்தித்தோம்.

சொன்னபடி 600 கிலோ நாங்கள் இதுவரைக்கும் துவரையை வரப்பு வெள்ளாமையாகத்தான் செய்வோம். கடலையைப் போட்டுவிட்டு ஒவ்வொரு சால் வரிசையில் மட்டும்தான் துவரையை விதைப்போம். இந்த தடவைதான் வயல்முழுக்க துவரையை நட்டிருக்கிறோம். ஆரம்பத்தில், வேளாண் அலுவலர் சொன்னப்போது.. கொஞ்சம் யோசனையாகத்தான் இருந்ததது. பிறகு, நட்டுதான் பார்ப்போமே என்று துணிந்து நட்டோம். சும்மா சொல்லக் கூடாது, அவங்க சொன்ன மாதிரியே மகசூல் கிடைத்திருக்கிறது என்றார்.

"விதைகளை 'பிளாஸ்டிக் டிரே'வில் போட்டு நாத்து தயார் செய்தோம். ஒரு ஏக்கருக்கு நாத்திற்கு ஒரு கிலோ விதை சரியாக இருந்தது. 25-ம் நாள் நாத்தை எடுத்து, வயலில் நட்டோம். செடிக்கு செடி 5 அடி வரிசைக்கு வரிசை 4 அடி என்கிற கணக்கில் நட்டோம்.

நட்டதிலிருந்து 25 நாளில் ஒரு களை எடுத்து மண் அணைத்தோம். அப்போதே செடியிலிருந்த நுனிகளைக் கிள்ளி விட்டோம். இப்படி நுனியைக் கிள்ளி விட்டதால் அதிகமாக சிம்பு வெடித்தது. நடவுக்கு முன் குப்பை எரு போட்டதோடு சரி, வேறெந்த உரமோ, மருந்தோ அடிக்கவில்லை, பயிர் அருமையாக வளர்ந்தது. இது, வறட்சியான பகுதி. இருக்கும் கொஞ்சத் தண்ணீரை வைத்து வெள்ளாமை செய்து கொண்டிருக்கிறோம். அதிலேயே இப்படி விளைந்ததைப் பார்க்க ஆச்சரியமாக இரக்கிறது ‘அதிகாரிகள் சொன்னபடியே ஏக்கருக்கு 600 கிலோவிற்கு குறையாது என்று பார்த்தவர்கள் எல்லாம் சொல்கிறார்கள். இன்னும் இருபது நாளில் அறுவடை, செய்திவிடுவோம் என்றார்.

**மானாவாரியில் 300 கிலோ!**

மானாவாரியில் துவரை சாகுபடி செய்திருக்கிறார், கோம்பை பகுதியைச் சேர்ந்த ரங்கமணி. திண்டுக்கல் மவாட்டத்திலேயே கடுமையான வறட்சிப்பகுதி இதுதான். அதிலும் இந்த வருடம் சுத்தமாக மழையே இல்லை. அதனால் எந்த பயறு பட்டையும் சொகமில்ல. எப்பவும் சோளத்தை விதைத்துவிட்டு, சாலில் நாட்டு துவரையை விதைப்போம். 6 மாதம் கழித்து அறுத்துப் பார்த்தால் ஒரு ஏக்கரில் 40 கிலோவில் இருந்து 60 கிலோ வரைக்கும் துவரை கிடைக்கும். வந்தவரைக்கும் வருமானம் என்று இருந்துவிடுவோம்.

இந்தத் தடவை வேளாண்மை அதிகாரிகள் மானாவாரி நிலத்தில் துவரை நாத்தை நடச் சொன்னார்கள். மழையுமில்லாமல், தண்ணீருமில்லாமல் இது சரியாக வராது என்று சொன்னேன். வற்புறுத்தி நட வைத்தார்கள். ஆடிக்குப் பிறகு கிடைத்த ஒரு மழையில் நிலத்திலிருந்த ஈரத்திலேயே நாத்துகளை நட்டேன். நட்ட பத்து நாளில் ஒரு தூறல் கிடைத்தது. அவ்வளவுதான், அதற்குப் பிறகு மழை வாடையே இல்லை.

ஆனாலும், பயிரு உயிர் பிழைத்து வந்துவிட்டது. 30 நாளில் நுனி கிள்ளச் சொன்னாங்க. அதன்படி செய்ததால் அதிகமாக கிளை அடித்தது. வழக்கமாக வரும் பயிரைவிட வளர்ச்சியும், விளைச்சலும் நன்றாக இருக்கிறது. இன்னும் ஒரு மழை கிடைத்திருந்தால் இன்னும் அதிக மகசூல் கிடைத்திருக்கும். இன்னும் பத்து நாளில் அறுவடை முடித்திடுவேன். அப்போதுதான் எவ்வளவு மகசூல் கிடைக்கும் என்று தெரியும் என்றார்.

அறுவடை முடிந்ததும் நம்மைத் தொடர்பு கொண்ட ரங்கமணி , “ஏக்கருக்கு 4 ( 75 கிலோ) மூட்டை கிடைத்திருக்கு. மொத்தம் 300 கிலோ , இது வழக்கத்தைவிட , நான்கு மடங்கு கூடுதல் மகசூல் என்று மகிழ்ச்சியோடு சொன்னார்.

**வழக்கததைவிட அதிகமாக காய் பிடிக்கிறது!**

புங்கம்பாடி கிராமத்தைச் சேர்ந்த மானாவாரி விவசாயி முருகேசன், நான் நடவு முறையில் ஒன்றரை ஏக்கரில் துவரை நட்டிருக்கிறேன். வழக்கமான முறையைவிட அதிகமாக காய் பிடிக்கிறது. அதுவும் இந்த வருடத்து கடுமையான வறட்சியைத் தாங்கி இந்தளவு காய்ச்சதை மற்ற

விவசாயிங்களே ஆச்சரியமாக பார்க்கிறார்கள். நிலத்தில் ஈரம் இருக்கும் போது நட்டுவிட்டால் போதும், வேற எந்தப்பாடும் இல்லாமல் விளைந்துவிடுகிறது. அப்பப்ப மழை கிடைத்தால்… நல்ல மகசூல் கிடைக்கும் போல. எனக்கு இந்தத் தடவை, ஒன்றரை ஏக்கரிலும் சேர்த்து 5 மூட்டைதான் ( 60 கிலோ ) கிடைக்கும் என்றார்.

முருகேசனின் கருத்தை ஆமோதித்த அதே ஊரைச் சோந்த தங்கவேல், நல்ல தொழில்நுட்பம்தான். வழக்கமாக ஏக்கருக்கு அதிகபட்சமாக 100கிலோ கிடைத்த இடத்தில், 400 கிலோ கிடைக்கிறது… ரொம்ப பெரிய விஷயம். இந்த முறை மழையில்லாமல் போனதால் அதிகாரிகள் சொன்ன மகசூல் கிடைக்கவில்லை. மழை கிடைத்திருந்தல் அவங்க சொன்ன மகசூலையும் தாண்டி விளைந்திருக்கும் என்று தோன்றுகிறது. என்னுடைய மானாவாரி வயலில் ஆய்வு செய்து பார்த்ததில் 'மழை இல்லாத காரணத்தால்… ஏக்கருக்கு 160 கிலோ கிடைக்கும் என்று சொல்லியிருக்கார்கள். அறுவடை செய்தால் தான் சரியான மகசூல் தெரியும் என்றார்.

**பச்சைக் காயாக விற்றால் லாபம்!**

குஜிலியம்பாறை பகுதியில் துவரையில் நடவு முறையை விவசாயிகளிடம் அறிமுகம் செய்து வரும் வேளாண் உதவி இயக்குநர் ரவிபாரதி, நடவு முறைக்காக 130 நாள் வயதுடைய கோ. ஆர்.ஜி- 7 ரக துவரை விதையை இந்தப் பகுதி விவசாயிகளுக்குக் கொடுத்தோம். குஜிலயம்பாறை பகுதியில் மட்டும் இறவையில் 35 ஏக்கரிலும், மானாவாரியில் 40 ஏக்கரிலும் நடவு முறையை அறிமுப்படுத்தினோம். இந்த போகத்தில் சரியான மழையில்லாததால் நாங்கள் எதிர்பார்த் மகசூல் இல்லை.

மானாவாரியில் ஏக்கருக்கு 400 கிலோ… இறவையில் 600 கிலோ…என்பதுதான் எங்களுடைய எதிர்பார்ப்பு. தற்போது மழை இல்லாததால்… மானாவாரியில் 200 முதல் 300 கிலோவும், இறவையில் 500 முதல் 600 கிலோவும் மகசூல் கிடைக்கும் என்பது வயல் சோதனை முடிவில் தெரிய வந்திருக்கிறது. இறவையில் முறையாகப் பாசனம் செய்த போதும், மேல் மழையில்லாததால் மகசூல் குறைந்து விட்டது.

அதிக பராமரிப்பும், இடுபொருட்களும் தேவைப்படாத கோ.ஆர்.ஜி-7 ரகத்தை பச்சைக் காயாக அறுவடை செய்தும் விற்பனை செய்யலாம். 90 நாள் முதல் 150 நாட்கள் வரையிலான பச்சைக் காய்களை அறுவடை செய்வதன் மூலமாக, ஒரு ஏக்கரில் 4 டன் முதல் 6 டன் வரை காய்கள் கிடைக்கும். இதை கிலோ 10 ரூபாய் என்கிற விலையில் ஓசூர், பெங்களூர் மார்க்கெட்டுகளில் சந்தைப்படுத்தலாம். உள்ளூரிலும் தேவைக்கேற்ப விற்பனை செய்யலாம். காய் முற்றிய பிறகு பறித்து, பருப்பாக மாற்றி விற்கும்போது, ஒரு கிலோ துவரைக்கு 50 ரூபாய் விலை கிடைக்கிறது. அந்த வகையில், தற்போது இறவையில் நடவு செய்திருக்கும். விவசாயிகளுக்கு 500 கிலோவுக்கு 25 ஆயிரம் ரூபாய் கிடைக்கும். செலவுத் தொகையாக 4 ஆயிரம் ரூபாய் போனாலும்… 21 ஆயிரம் ரூபாய் லாபம். மானாவாரி விவசாயிகளைப் பொறுத்தவரை, 200 கிலோவிற்கு 10 ஆயிரம் ரூபாய் கிடைக்கும். இதில் செலவு 2 ஆயிரம் ரூபாய்

போனாலும். 8 ஆயிரம் ரூபாய் லாபம். இதையெல்லாம் பார்த்துவிட்டு, தற்போது நடவு முறையில் துவரை சாகுபடி செய்ய அதிக விவசாயிகள் முன் வந்திருக்கிறார்கள். இதுவே இந்தத் தொழில்நுட்பத்திற்குக் கிடைத்த வெற்றி என்றார்.

**தொடர்புக்கு**

சாவித்திரி, செல்போன் : 90472 – 88744

ரங்கமணி, செல்போன்: 98430 – 62942

ரவிபாரதி, செல்போன் :94425 – 42894

**ஆதாரம்: பசுமை விகடன் வெளியீடு 25.02.13** www.vikatan.com